செ.வெ.எண்:76 நாள்:27.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற இலவச கண் மருத்துவ முகாமில் 366 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டது- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்

புதுக்கோட்டை இராணியார் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி ஜோசப் கண் மருத்துவமனை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்திய மாபெரும் கண் மற்றும் மாறுகண் சிகிச்சைக்கான இலவச முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (27.08.2016) துவக்கி வைத்தார்

இந்த மாபெரும் கண் மற்றும் மாறுகண் சிகிச்சைக்கான இலவச முகாமினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து நோயாளிகளுக்கு இலவச பரிந்துரை அட்டைகளை வழங்கி பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழக அரசு ஏழை எளிய மற்றும் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் உயர்தர சிகிச்சைகள் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சரின்



புதுக்கோட்டை இராணியார் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி ஜோசப் கண் மருத்துவமனை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்திய மாபெரும் கண் மற்றும் மாறுகண் சிகிச்சைக்கான இலவச முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (27.08.2016) துவக்கி வைத்து நோயாளிகளுக்கு இலவச பரிந்துரை அட்டைகளை வழங்கினார்

விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை இராணியார் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி ஜோசப் கண் மருத்துவமனை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்திய மாபெரும் கண் மற்றும் மாறுகண் சிகிச்சைக்கான இலவச முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் கண் நீர் அழுத்த நோய், விழித்திரை நோய், மாறுகண், விட்ரெக்டமி, விழித்திரை விலகல், கண் இரைப்பை (மூடுதல்)நீக்குதல் குழந்தைகளுக்கான கண்புரை அறுவை சிகிச்சை, ரெடினோபதி ப்ரீமெச்சூரிட்டி போன்ற பல்வேறு நோய்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 366 நபர்களுக்கு கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில். 30 நபர்கள் மாறுகண் பாதிப்பு உள்ளவர்களாகவும், 60 நபர்கள் கண்புரை உள்ளிட்ட பல்வேறு பாதிப்பு உள்ளவர்களாகவும் கண்டறியப்பட்டுள்ளனர். இவ்வாறு நோய் உள்ளவர்களாக கண்டறியப்பட்ட 90 நபர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவச அறுவை சிகிச்சை மேற்கொள்ள இலவச பரிந்துரை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவர்களுக்கு உரிய அறுவை சிகிச்சைகள் திருச்சிராப்பள்ளி ஜோசப் கண் மருத்துவமனையில் செய்யப்படவுள்ளது. எனவே அனைத்து பொது மக்களும் இம்முகாமினை உரிய பெற்று பயன் பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இம்முகாமில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு.வி.சி. ராமையா, நகர்மன்றத் தலைவர் திரு.ரா.ராஜசேகரன், அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.டி.பரிமளதேவி, இணை இயக்குநர் (பொ) மரு.சையதுமொய்தீன் , ஜோசப் கண் மருத்துவமனை நிர்வாக அலுவலர் திருமதி. சுபாபிரபு, நகர்மன்ற துணைத்தலைவர் திரு.சேட் என்ற அப்துல் ரஹ்மான், நகர்மன்ற உறுப்பினர்கள் திரு.பாஸ்கர், திரு. ராமதாஸ், திரு.அய்யப்பன், தொழிலதிபர் திரு.எஸ்.வி.எஸ்.ஜெயக்குமார்,

தலைமையாசிரியை திருமதி. அருமைகண்ணு, மருத்துவர்.சலீம், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**